பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 05 திங்கட்கிழமை (20 07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 235

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச விசாரணை மன்று

## பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் வெளியிட்ட யோசனை

லண்டன், ஜூலை 20

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச விசாரணை மன்று ஒன்று நியமிக்கப்பட வேண்டும். அந்த மன்றின் முன் தமிழர்கள் — சுயநிர்ணய உரிமை கோருபவர்கள் — தமது தரப்பு வாதங்களை முன்வைக்க வசதி செய்யப்பட வேண்டும்.

அந்த வாதங்களை அடிப்படையாக வைத்து சுயநிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்களா என்பதை நிர்ணயித்துக் கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

இவ்வாறு ஒரு புதிய யோசனையை முன்வைத்திருக்கிறார் பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை உறுப்பினரான. அவேவரி பிரபு.

பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இந்த ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் தமது நீண்ட பேட்டியில் தமிழர் பிரச்சினை சம்பந்தமாகத் தெரிவித்த முக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சியில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான மணிமுடி அல்லது சூட்டி (தனபாலசிங்கம் தெய்வீகநாதன் - அல்லாரை) வீரமரணமடைந்தார். [உ-3]

### இலங்கை வங்கியில்

## பணக் கொடுக்கல் வாங்கல்: மட்டுப்படுத்த உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 20

பணக்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மட்டுப் படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளுமாறு இலங்கை வங்கி தலைமைப்பீடம் யாழ். மாவட்டத்தில் உள்ள கிளைகளுக்கு பணிப்புரை வழங்கியிருக்கிறது.

கடந்த சனிக்கிழமை இலங்கைவங்கியின் தலைமைப் பீட அதிகாரிகளுடன் யாழ். பிராந்திய அதிகாரிகள் வானொலி மூலம் தொடர்பு கொண்டபோதே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டதாம்.

கூடுதலான பணத்தை வங்கிக் கிளைகளில் வைத்திருக்க வேண்டாம் என்றும் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### யுத்தம் காரணமாக ஏற்பட்ட

## வங்கிகளின் பாதிப்பு குறித்து உலக வங்கிக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அரசாங்க வங்கிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விவரமான அறிக்கை சமர்ப்பிக்குமாறு உலக வங்கி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக பிரிட்டிஷ் கணக்காளர் குழு ஒன்றையும் உலக வங்கியே நியமித்திருக்கிறது.

பிரஸ்தாப சர்வதேசக் கணக்காளர் குழுவினர் இப்போது கொழும்பு வந்து தமது ஆய்வு வேலைகளைத் தொடங்கி உள்ளனர். வடக்கு-கிழக்குக்கு குழுவினர் நேரில் வர முடியாததால் இங்குள்ள வங்கி அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு கணக்கு விவரங்கள் பெறப்படுகின்றன. அதன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பேசாலை தமிழ் அகதிகளை வெளியேறுமாறு மிரட்டல்!

### ராணுவத்தினர் காலக்கெடு விதிப்பு

மன்னார், பேசாலை அகதி முகாமில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை இராணுவத்தினர் மிரட்டி அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் வெளியேறுவதற்கு படையினர் காலக்கெடு விதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது,

ஆனால் தமிழ் அகதிகள் தமது வீடுகள் சேதமடைந்துள்ளதாலும், முஸ்லிம்கள் தமது வீடுகளில் அத்துமீறி குடியேறியுள்ளதாலும் அகதி முகாமில் இருந்து வெளியேற முடியாது திணறிக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

### வாழைச்சேனை - பேய்த்தாளை

## அகதி முகாம் தமிழரை அச்சுறுத்தும் முஸ்லிம் குழு!

யாழ்ப்பாணம், ஜூலை 20

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை, பேய்த்தாளை அகதி முகாமில் தங்கியிருக்கும் அப்பாவித் தமிழர்களைக் கடந்த நான்கு நாட்களாக முஸ்லிம் குழுவினர் அச்சுறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதி முகாமில் இருந்து இரு தமிழர்களை அந்தக் குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரமும் முஸ்லிம் குழுவினரால் 8 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, - மஞ்சந்தொடுவாய் அகதிமுகாமில் தங்கியுள்ளோரும் கடந்த இரு தினங்களாக அச்சுறுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## மாகாண சபையை ஒழித்து மாவட்ட சபை வேண்டுமாம்!

### தெரிவுக்குழுவுக்கு ம. ஐ. மு. யோசனை

கொழும்பு, ஜூலை 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் மக்கள் ஐக்கிய முன்னணி தனது யோசனையை அண்மையில் சமர்ப்பித்தது.

தெரிவுக்குழுவிடம் யோசனை சமர்ப்பித்த முதலாவது சிங்களக் கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ மாகாண சபை முறை ஒழிக்கப்படவேண்டும்.

★ பூரண நிர்வாக, அரசியல் அதிகாரங்கள் கொண்ட மாவட்ட சபைகளை நிறுவுதல், அவற்றின் ஆட்சி, அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

★ திருமலைத் துறை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரச எதிர்ப்புப் பேரணியில் 500க்கு அதிக வாகனங்கள்

### அனுராதபுரம் நோக்கி புறப்பாடு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசை பதவி இறக்குவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருக்கும் பிரசார நடவடிக்கைகளுள் ஒன்றான எதிர்ப்புப் பேரணி நேற்று ஆரம்பமானது.

கொழும்பிலிருந்து வடமத்திய மாகாணத்தின் தலைநகரமான அனுராதபுரத்திற்கு இந்தப் பேரணி புறப்பட்டது.

கார்கள், வான்கள், மோட்டார் சைக்கிள்கள் என ஐநூறுக்கும் அதிகமான வாகனங்கள் இந்தப் பேரணியில் இடம் பெறுவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

[3 ஆம் பக்கம் பார்க்க]

### ஐ. தே. க. ஆட்சி குறித்து

## வடக்கு-கிழக்கு மக்களுக்கு அனுரா எடுத்துரைப்பாராம்!

கொழும்பு, ஜூலை 20

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து 15 வருடங்கள் முடிவுறும் இக்காலப் பகுதியில் வடக்கிலும். கிழக்கிலும் இனப்போர் நடந்து கொண்டிருக்கிறது; தெற்கிலும் உள்நாட்டுப் போர் நடந்தது.

இந்த விவரங்களை ஸ்ரீ. ல. சு. கட்சியின் முக்கிய பிரமுகரான அனுரா பண்டாரநாயக்கா வடக்கு-கிழக்கு மக்களுக்கு எடுத்துரைக்கத் திட்டமிட்டுள்ளார்.

ஏஜென்ஸிச் செய்தி ஒன்று இவ்வாறு தெரிவித்தது.

இந்த அரசு மக்களுக்குச்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்க் குழுப் பிரதிநிதிகள் சு. க. தலைவர்களுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 20

கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துப் பேசியதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு நடவடிக்கைகள் குறித்து அவர்கள் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

வீட்டிற்கும், கந்தோருக்கும், மினிவானுக்கும் பாவிக்கக் கூடிய இரும்புப் பைப்பிலானதும் மூன்று பேர் வசதியாக இருக்கக்கூடியதுமான குசன் கதிரைகள் விற்பனைக்கு உண்டு. தேவைக்கு உடன் தொடர்பு கொள்ளவும்! ஸ்ரீலங்கா அச்சகம், 336, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [21813]

### தவறிவிட்டது

இலங்கை மின்சாரசபையை சேர்ந்த இளையதம்பி சுப்பிரமணியத்தின் 460393078 X இலக்க அடையாள அட்டை அச்சுவேலிக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறிவிக்கவும். இளையதம்பி சுப்பிரமணியம், சரசாலை மத்தி, சாவகச்சேரி. [21807]

ஜெகன்நாதன் ஆகிய நான் சுன்னாகம், அளவெட்டியினூடாக ஆனைக்கோட்டைக்குப் போகும் பாதையில் இலங்கை மின்சார சபையின் அடையாள அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை இல. 580753841 V தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் செ. ஜெகன்நாதன், கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [4919]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [சி-2931]

### தேவை

அச்சக வேலையில் அனுபவமுள்ள, பழக ஆர்வமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும். இல. 127 [29], சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (5168)

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

## எடிசன்

அக்கடமி

(யாழ். இந்து அருகில்)

K. K. S. Rd., Jaffna.

**SPOKEN ENGLISH**

With

GRAMMAR

By

**BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்:

22 - 07 - 1992

புதன் பி.ப. 5 மணி

[21810]

JAFFNA COLLEGE — CEYLON — 1823 — 1872

## யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை.

★ பேராதனைப் பல்கலைக்கழகக் கலைமாணித் தேர்வு (B.A.) விரிவுரைகள் 03-08-1992 திங்கள் பி.ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகும்.

★ பொருளியல் திரு. அ. குமாரவேல்.
★ அரசியல் ,, ச. சகாயசீலன்.
★ தமிழ் ,, பொ. அருந்தவநாதன்.
★ இந்துநாகரிகம் க. கலைச்செல்வி.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கான G.A.Q. விரிவுரைகளும் இதே தினம் ஆரம்பமாகும்.

முதல்வர்,
கல்லூரிப் பூங்கா.

[சி-2594]

## Computer Programming in Basic Language

4 MONTHS

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 25 - 07 - 1992

(10-30 மணி)

Lectures By: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

I. A. B. (All Stages),
Short - Hand & Typing நடைபெறுகின்றன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers in Computer Education)

16, 3rd. CROSS STREET,
JAFFNA.

(சி-2927)

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 28 — 03 — 1972



தமிழீழ மீட்பில்: 20 — 07 — 1991

## வீரவேங்கை தர்சினி

(அருளம்பலம் றஞ்சினி)

[கட்டைக்காட்டில் 20-07-1991 இல் நடைபெற்ற ஆகாய கடல்வெளித் தாக்குதலின்போது வீரமரணம்]

றஞ்சியே! உன் குழிவிழும்
சிரிப்பாலும் பண்பான பேச்சாலும்
பணிவான நடத்தையாலும் - உன் வீரச் செயலாலும்
எம் நெஞ்சங்களில் உன் நினைவலைகள்
நிஜமாய் நிற்கிறதே! தர்சினி - நீ
சென்று ஓராண்டு சென்றாலும் வீடென்ன
நீ நாடிச் சென்ற இடமெங்கும் - உனை
காணாமல் வாடி நிற்கின்றோம்
றஞ்சியம்மா என்று அழும் - உன்
அன்னையின் குரல் கூட கேளாது,
ஈழ அன்னையின் மடிமீது உறங்குகின்றாயோ!

இன்று [20-07-1992] வீட்டில் நடைபெறும் நினைவஞ்சலி வைபவத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினரும், உறவினர்களும்.

இல. 52, D. 10,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

[21671]

# தொழில் திறன் பயிற்சி நெறி; பாடசாலைகள் விவரம்

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ் மாவட்ட கல்வி அலுவலகத்தில் வளர்ந்தோர் கல்விப் பிரிவில் தொழில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் இன்றாகும். பாடசாலையை விட்டு விலகிய, 25 வயதுக்குட்பட்டவர்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம்.

பதினொரு பயிற்சி நெறிகளும் அவை நடைபெறவுள்ள பாடசாலைகள் பற்றிய விவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 'சாயி வீடியோ'

**Saie Video**

### மீண்டும் சாயி மணப்பந்தல்

எமது மணப்பந்தல் சேவைகள் எதிர்வரும் 19 - 08 - 92 விருந்து ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

வீடியோ படப்பிடிப்பில் முற்றிலும் நவீன முறையில் AVE 5 மிக்சர் துணைகொண்டு உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை வீடியோ படமாக்கிக் கொள்ள

சாயி வீடியோ
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

கிளை:
சாயி வீடியோ
வட்டக்குளம்,
கட்டப்பிராய்.

(21818)

## கம்பியூட்டர் கல்வி




★ BASIC
★ PASCAL
★ d BASE III +
★ LOTUS 1-2-3
★ WORD STAR 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 24-07-1992

மேலதிக விவரங்களுக்கு:

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

வடமராட்சி:
"சதா பொனிஸ்',
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தென்மராட்சி:
சயன்ஸ் சென்ரர்,
மடத்தடி,
சாவகச்சேரி.

[சி-2932]


## 4ஆம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்:
12 - 04 - 1934

✱

மறைவு:
02 - 08 - 1988

திதி: 20 - 07 - 1992



## அமரர் நாகமுத்து தம்பிஐயா

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து, எங்களை எல்லாம் இந்நிலைக்கு ஆளாக்கிய ஐயாவே! இன்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

[21811]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# தள நிலைமை பேணுதல் தேவை

ஜனாதிபதி பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசினைப் பதவியில் இருந்து இறக்குவதற்கான முயற்சிகளில் எதிரணிக் கட்சியினர் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த பதினைந்து வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியே ஒரே தொடர்ச்சியாக ஆட்சி நடத்தி வருகிறது. எனினும் கட்சியின் தலைமைத்துவம் மாறியிருக்கிறது. தலைமைத்துவம் மாறி என்ன? மக்களின் கஷ்டங்கள் தீரவில்லை.

அதிகார துஷ்பிரயோகம், சர்வாதிகாரப் போக்கு, ஊழல், மோசடி, செல்வாக்குப் பிரயோகம், பாரபட்சம் என்பன தலைதூக்கும் போது எந்த அரசாங்கமும் பலவீனமடையும்.

அவ்வாறு அரசு பலவீனம் அடையும் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, எதிரணியினர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவது இயல்பானதே.

எதிரணியினர் தமது இந்த முயற்சியில் வெல்வதும் தோற்பதும் தென்னிலங்கை மக்களின் ஆதரவிலும் அவர்களின் அரசியல் விவேகத்திலுமே தங்கியுள்ளது. தமிழர்களுக்கு இது குறித்து எவ்வித அக்கறையும் இல்லை. தென்னிலங்கையை ஐ. தே. க. ஆண்டால் என்ன, ஸ்ரீ. ல. சு. கட்சி ஆண்டால் என்ன?! இரண்டும் ஒன்று தான்!

கடந்த ஐந்து தசாப்தங்களாக இரண்டு கட்சிகளுமே மாறி மாறி ஆண்டு வருகின்றன. ஆனால் இத்தனை வருடங்களின் பின்னர் கூட, தமிழர் பிரச்சினையை நியாயமாக, நீதியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் இரண்டு கட்சிகளுமே அக்கறை கொண்டதில்லை.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதிலும், தமிழர்களைக் கொன்றும், சித்திரவதை செய்தும் கொடுமைப்படுத்துவதிலும் யாரை, யார் மிஞ்சுவது என்று இருசாராரும் போட்டி போட்டனர். தமிழர்களைக் காலங்காலமாக அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் நிரம்பியுள்ள சிங்கள-பௌத்த பேரினவாதம் என்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே சகல தென்னிலங்கைக் கட்சிகளும்!

எனவே, அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் கூட தமிழர்களுக்குச் சாதகமாக எதுவும் நடந்து விடும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது! ஸ்ரீ. ல. சு. கட்சி எப்போதும் இந்திய சார்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதால், தமிழர்கள் மேலும் நெருக்கடிகளையும் பாதிப்புகளையும் எதிர்நோக்கும் பாதகமான சூழ்நிலை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகாமல் இருக்கும்போது, ஜனாதிபதி தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ எப்படி நடக்கப்போகிறது? தென்னிலங்கையில் மட்டும் தேர்தல் நடத்தப்பட்டால், தமிழர் தாயகம் தன்பாட்டிலேயே தனிநாடாகும் வாய்ப்பு உண்டாகும். அதற்காக, வடக்கு-கிழக்கில் தமிழர்களின் இப்போதுள்ள இறுக்கமான பாதுகாப்பு தளநிலைமை பேணப்படுவதோடு மேலும் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியம். இது விடயத்தில் தமிழர்கள் திட்டமிட்டும், விவேகத்துடனும் செயற்பட வேண்டும்.

# சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த தெரிவுக்குழு கோரும்?

கொழும்பு, ஜூலை 20

மணலாறு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இவ்வாறான கோரிக்கை ஒன்றை சமர்ப்பிக்க இருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவித்துள்ளன.

திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இப்போது பரவலாக வலியுறுத்தப்பட்டு வருவதைத் தொடர்ந்தே தெரிவுக்குழுவும் இக்கோரிக்கையை விடுக்க இருப்பதாக வீரகேசரி ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கையும், கிழக்கையும் துண்டாடும் நோக்கத்துடன் கிழக்கில் சிங்கள குடியேற்றங்கள் கொழும்பு அரசுகளினால் பல ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1983ஆம் ஆண்டிற்குப் பின் இந் நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்தன. இதன் விளைவாக திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் விகிதாசாரம் வீழ்ச்சி அடைந்தது.

மணலாறு மாவட்டத்திலும் இது போன்ற ஒரு நிலையை உருவாக்கவே அங்குள்ள மக்கள் மீது இராணுவ நடவடிக்கைளும், அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டு, அவர்களை அங்கிருந்து வெளியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போசாக்கு நிவாரணம் தற்காலிக இடைநிறுத்தம்

அராலி, ஜூலை 20

கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்கு பிரிவு இதுவரை காலமும் வழங்கி வந்த போசாக்கு நிவாரணம் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு நிவாரணம் ஆகியவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் நிலவும் நிலைமையை அனுசரித்தும் கையிருப்புகளை கவனத்திற்கொண்டுமே இவ்விநியோகங்கள் தற்காலிகமாகப் பின்போடப்பட்டுள்ளதாகவும் — வெகு விரைவில் சகலருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. [த-12]

## 6 பொலீஸார் கைது

தமிழ்நாடு – அண்ணாமலை நகர் பொலீஸ் நிலையத்தில் அண்மையில் கைதி ஒருவர் மரணமானது. அந்தக் கைதியின் மனைவி மானபங்கப் படுத்தப்பட்டது ஆகிய சம்பவங்கள் தொடர்பாக இரண்டு சப். இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஆறு பொலீஸார் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஏற்கனவே தற்காலிக வேலை நீங்கஞ் செய்யப்பட்டுவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## பரிசாரகர் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். போதனாவைத்திய சாலையில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் பரிசாரகர் பயிற்சிக்கு யாழ். போதனாவைத்தியசாலை சிற்றூழியர்கள் 50 பேரும், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அதிகாரி பிரிவில் இருந்து 42 பேரும் தெரிவாகியுள்ளனர். [ஒ-15]

## ஊர்காவற்றுறையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு

அராலி, ஜூலை 20

ஊர்காவற்றுறைச் செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து வலி. மேற்கு செயலர் பிரிவில் தங்கியிருக்கும் சகலரும் தமது உலர் உணவு அட்டைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

தாங்கள் தங்கியிருக்கும் பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடம் தங்கள் குடும்பப் பதிவு அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து உலர் உணவு அட்டைகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

இவற்றை சரிபார்த்து உடனடியாக உணவு விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படியும் கிராம உத்தியோகத்தர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. [த-12]

## மட்டு. நோயாளர்கள் வைத்திய வசதியின்றி அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 20

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைத்திய வசதிகள் இன்மையால் அப்பகுதி தமிழ் நோயாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

முக்கிய சிகிச்சைகளை மேற்கொள்ளத் தேவையான வைத்திய உபகரணங்கள் மற்றும் வைத்தியர்களுக்கு அந்த ஆஸ்பத்திரியில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது போன்றே மாந்தீவில் உள்ள தொழுநோய் வைத்தியசாலையும் வசதிகளற்ற நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. [த-5]

# விபுலாநந்தரின் தமிழ் பற்று அவரின் சுதந்திர உணர்வைக் காட்டுகிறது

## நூற்றாண்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 20

தனது நாட்டையும், மக்களையும் புரிந்து கொண்ட விபுலாநந்த அடிகள் தமிழின் மீது கொண்டிருந்த பற்று அவர் சுதந்திர உணர்வு மிக்கவர் என்பதைப் புலப்படுத்துகிறது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், தேசியக் கொடியை தனது வதிவிடத்தில் ஏற்றிய அடிகளாரின் துணிவும், இனத்தின் மீது கொண்ட பற்றும் எமக்கு ஒரு நிறைவான வரலாற்றை உணர்த்தி நிற்கின்றன.

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ். பிரதேச செயலாளர் திரு. க. குணராசா இவ்வாறு கூறினார்.

கல்லூரியின் தனிநாயகம் அடிகள் முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி விழாவில் அவர் பேசும் போது மேலும் கூறியதாவது:

சிந்தனை இல்லாத கல்வியால் பயனில்லை. அதுபோல் கல்வி இல்லாத சிந்தனை ஆபத்தானது. விபுலாநந்தர் பல்வேறு துறைகளில் கற்றுத் தேர்ந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு நிலையிலும் தான் ஒரு மாணாக்கனாக இருந்து சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லி வந்தார். புத்தரிடம் ஆட்சி, அரண்மனை, செல்வம் இருந்தது. அவர் தன்னிடம் இருந்ததைத் துறந்து துறவியானார். ஆனால் விபுலாநந்தரின் துறவோ வித்தியாசமானது. அவர் ஒரு சமூகத் துறவியாக வாழ்ந்தார். அவர் இக்கல்லூரியின் ஆசிரியர் என்ற முறையில் அவருக்கு விழா எடுக்கும் தகுதி இக்கல்லூரிக்கு உண்டு என்றார்.

கல்லூரி அதிபர் வண. எ. ஐ. பேனாட் பேசும் போது—இக்கல்லூரியின் ஆசிரியராகப் பணிபுரிந்த மயில்வாகனன் தனது அறிவாற்றலினாலும், ஆளுமையினாலும் சமூகத்திற்கும் சமயத்திற்கும் அரும் பணியாற்றினார். துறவுநிலை எய்தி விபுலாநந்தராக அவர் மேற்கொண்ட ஆய்வுகள் தமிழின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பயன்களைத் தந்துள்ளன. அவருக்கு விழா எடுப்பது எமது கல்லூரியின் கடமையும் உரிமையுமாகும்— என்றார்.

பேராசிரியர் வண. பிதா ஜே. வி. சந்திரகாசன் தமது உரையில்: யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று முதன் முதல் குரல் கொடுத்தவர் சுவாமி விபுலாநந்தர் என்றார்.

வித்துவான் திரு க. சொக்கலிங்கம், ஆசிரியர் வாகரைவாணன், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, புலவர் வேல்மாறன் உட்படப் பலர் உரையாற்றினர்.

காலை நிகழ்ச்சியில் அடிகளாரின் உருவப்படம் புலவர் க. சி. குலரத்தினத்தால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா மரம் நாட்டும் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (த-111)

## தட்டுப்பாடு நீங்கியது

நவாலி, ஜூலை 20

ஆனைக்கோட்டை கிராம சபை சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு நீங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் பிரதேச சபையின் முயற்சியைத் தொடர்ந்து இவ் வைத்தியசாலைக்குப் போதியளவு மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன. [த-100]

## அரசாங்க சேவைக்கு 3,500பேர் தெரிவு

அரசாங்க சேவைக்கும் மாகாண அரசாங்க சேவைக்கும் 3ஆயிரத்து 500 பேர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. இவற்றுக்கான முடிவு திகதி அடுத்த மாதம் 7ஆம் திகதியாகும். போட்டிப் பரீட்சைகள் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜி சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அல்லது தேசியக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் 4 திறமைச் சித்திகளுட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

3 மொழிகளில் நடத்தப்படவுள்ள இப் பரீட்சை பற்றிய சகல விவரங்களும் இம் மாதம் 18 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் உள்ளன. [த]

## சந்திரிகா நியமனம்

கொழும்பு, ஜூலை 20

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அத்தனகல சம்மேளனச் செயலாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார். தான் கட்சியில் சேர்வதைப் பெரும்பான்மையானவர்கள் வரவேற்றுள்ள போதிலும், கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் சிலர் அதனை எதிர்த்து வருவதாகவும் திருமதி குமாரணதுங்கா பகிரங்கமாகத் தெரிவித்தார்.

திரு அனுரா பண்டாரநாயக்கா தம்மை எதிர்ப்பதையே திருமதி குமாரணதுங்கா இப்படி மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார் என்று தினகரன் செய்தி வெளியிட்டிருக்கிறது. [த-எ]

### வடக்கு - கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த வாக்குறுதிகளைத் தனது 15 ஆண்டு கால ஆட்சியில் நிறைவேற்றவில்லை என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளது. ஆனாலும் கடந்த 15 ஆண்டுகளில் அரசின் நடவடிக்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிக்கு இட்டுச் செல்லவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-10)

### அரச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அதிகம் உள்ள பகுதிகள் ஊடாகவே எதிர்ப்புப் பேரணி செல்வதாகவும் கூறப்படுகிறது.

பேரணி செல்லும் பகுதிகளில் ஆங்காங்கே பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படுவதாகவும் —

நான்கு நாட்களில் பேரணி அனுராதபுரத்தை அடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 20 'மெரினால்' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றும், நேற்று முன்தினமும் பருத்தித்துறை துறைமுகத்தில் இடம்பெற்றன. [ஒ-5]

## விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை வேலணை பிரதேச செயலர் பிரிவுகள் இணைந்து நடத்தும் தீவக இடம்பெயர்ந்தோருக்கான விளையாட்டு விழா இன்று திங்கள் காலை 8 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புவியின் மடியில்: 09—10—1972

புனிதனின் அடியில்: 20—07—91

### குமாரசாமி ரமேஷ்குமார்

[கப்டன் ஈழவன்]

அழகு தமிழ் சைவம் வாழும் ஐயனார் கோவிலடி தந்த
மகவு இது வென்று மனை மகிழ்ந்த வேளை
பழகு நடை மறந்து தலைவன் படைதனில் இணைந்து
ஈழமுனைப்போரில் இலங்கைப்படையினை எதிர்த்து.
மாவீரனானாயோ!

உன் வீரமரணத்தை நினைவுகூரும்:
பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

19/1 ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[21814]

## ஓராண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை நித்தியானந்தன்

( சிவசிதம்பரம் சிவகுமார் )

வீர ஜனனம் : 1975 — 05 — 23
வீர மரணம் : 1991 — 07 — 17

திதி : 20 — 07 — 1992

ஆண்டுகள் பல சென்றிடினும்
ஆறிடுமோ எம் துயரம்
ஆசைச்செல்வமே நீ எமைப்
பிரிந்து சென்றிட்ட போதிலும்
எம் நெஞ்சமது உள்ளவரை
நிலைத்து நிற்கும் உன்நினைவலைகள்
வையமது உள்ளவரை வாழ்ந்திருக்கும்
உன் நாமம்.

உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்தித்து நிற்கும்
திருமதி சிவசிதம்பரம் குடும்பம்,
உற்றார், உறவினர்கள்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(21817)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 28 — 01 — 50

உதிர்வு : 20 — 06 — 92

### அந்தோனி பீற்றர் இராசநாயகம்

கருணைக்கடலே இறைவா! எம்முடன் வாழ்ந்து உம்மிடம் சேர்ந்த அடியானை உமது நித்திய ஒளியுள் சேர்த்தருள வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, தாய், தந்தை,
சகோதரங்கள், உறவினர்.

733 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[21819]

## உற்சவங்கள்

ஊரெழு கிழரனைப்பதி பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும். [த]

★ ★ ★

ஆடிச்செவ்வாயான நாளை கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறும். [உ]

## ஜோன் ஸ்மித் புதிய தலைவர்

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் புதிய தலைவராக திரு. ஜோன் ஸ்மித் நேற்று தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி தோல்வி அடைந்ததும்— அதனைத் தொடர்ந்து கட்சித் தலைவர் பதவியில் இருந்து திரு. நீல் கின்னொக் விலகியதும் தெரிந்ததே.

## தொழில் திறன்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களும் வருமாறு:-

**உடையமைத்தல்**

வட்டு. இந்து. மல்லாகம் ம. வி, இணுவில் சைவப்பிரகாச ம. வி, யாழ். கனகரத்தினம் ம. வி, சாவகச்சேரி றிபேக், வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, தேவரையாழி இந்துக்கல்லூரி.

**ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து**

மல்லாகம் ம. வி, மானிப்பாய் இந்து, கனகரத்தினம் ம. வி, சாவகச்சேரி றிபேக், வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்.

**வீட்டு மின் இணைப்பு**

இணுவில் சைவமகாஜனா, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி. தேவரையாழி இந்து.

**ஹோட்டல் வியாபாரம்**

மருதனார் மடம் இராமநாதன் கல்., அச்சுவேலி புனித தெரேசா ம. வி.

**தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து**

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா, வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி, கொக்குவில் இந்து, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்.

**வானொலி திருத்தல்**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி.

**விவசாய விஞ்ஞானம்**

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி.

**பத்திரிகையாளர் பயிற்சி**

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

**கைப்பணிப் பயிற்சி**

வண்ணை நாவலர் ம. வி.

**குளிரூட்டி திருத்தல்**

யாழ். மத்திய கல்லூரி.

**மரத்தளபாட உற்பத்தி**

கரவெட்டி தேவரையாழி இந்து. [ஒ-5]


**A/L 94**

PHY:- திரு. ஜெயபாலன். B.Sc.

CHE:- திரு. ஜவன் B.Sc.

ஆரம்பம்:
நாளை செவ். 3 00 பி. ப.

**SHAMROCK**

யாழ். சுண்டிக்குளி

[21812]


# பரிசுத்த பாப்பரசருக்கு புற்று நோய் ஆபத்து?

## இன்றைய சோதனையில் முடிவு

ரோம், ஜூலை 20

அறுவைச் சிகிச்சைக்குள்ளான பரிசுத்த பாப்பரசருக்கு புற்றுநோய் ஏற்படும் ஆபத்துண்டா, இல்லையா என்பது இன்று [திங்கள்] அவருக்கு மேற்கொள்ளப்படவிருக்கும் இன்னொரு சோதனை மூலமே உறுதி செய்யப்படவுள்ளது.

பரிசுத்த பாப்பரசரின் உடல்நலத்தைக் கவனித்து வரும் விசேட நிபுணர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

உடல்தேறி வரும் பாப்பரசர் நேற்று தனது அறையில் இருந்த வண்ணம் வத்திக்கான் வானொலி மூலம் உரையாற்றவிருந்தார். [ஒ-எ]

## ம. எண்ணை, சவர்க்காரம் கிளிநொச்சியில் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மண்எண்ணெய், சவர்க்கார வகைகள் மற்றும் பல பொருள்கள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு, கிளிநொச்சியில் தேங்கிக் கிடப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட கோழிமுட்டையும் அங்கு பெருமளவில் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் விற்பனை செய்யப்படும் சில பொருள்களின் விலை விவரம் வருமாறு:-

மண்எண்ணெய் ஒரு லீற்றர் — 18 ரூபா, சன்லைட் — 7 ரூபா 50 சதம், தேங்காய் எண்ணெய் — ஒரு லீற்றர் 45 ரூபா, தேங்காய்—4 ரூபா, அரிசி — ஒரு கிலோ 16 ரூபா. [ஒ-162]

## நேர்முகப் பரீட்சை

உடுவில், ஜூலை 20

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கோட்ட ரீதியாக இன்று முதல் ஆரம்பமாகின்றன.

நேர்முகப் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் அந்தந்த கோட்ட அலுவலகங்களில் நடைபெறும்.

மருதனார்மடம் கோட்டம்: 20 ஆம், 21 ஆம் திகதி [இன்றும், நாளையும்] — காலை 9 மணி.

பருத்தித்துறைக் கோட்டம்: 22 ஆம், 23 ஆம் திகதி — காலை 9 மணி.

பண்டத்தரிப்புக் கோட்டம்: 24 ஆம், 25 ஆம் திகதி — காலை 9 மணி.

சாவகச்சேரிக் கோட்டம்: 27 ஆம், 28 ஆம் திகதி — காலை 9 மணி.

வேலணைக் கோட்டம்: 30 ஆம் திகதி — காலை 9 மணி.

யாழ்ப்பாணக் கோட்டம்: 30 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும், 31 ஆம் திகதி காலை 9 மணிக்கும். [ஒ-152]

## மாகாண...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகத்தை] சர்வதேச துறைமுகமாகப் பிரகடனப்படுத்தி துறைமுகத்தையும் அதை அண்டிய பகுதிகளையும் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உட்படுத்துதல்.

★ வடக்கு, கிழக்குக்கு என தனியிடம் வழங்கப்படக் கூடாது.

★ இன அடிப்படையில் நாட்டைப் பிரிக்கவோ, அதிகாரப் பரவலாக்கல் செய்யவோ கூடாது.

★ வடக்கு, கிழக்கை இணைக்கக் கூடாது.

★ காணிப் பங்கீட்டிலும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு தனியிடம் வழங்கப்படுதல் கூடாது. நாட்டின் அரசமைப்புப்படி சகல மக்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். [உ-10]

## வங்கிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருட்டு 1990 ஜூன் தொடக்கம் இந்த வருடம் ஜூன் வரையான இரண்டு வருடங்களுக்கும் உரிய கணக்கு விவரங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

யுத்தத்தால் அரச வங்கிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து உலக வங்கிக்கு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இனப்பிரச்சினைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய கருத்துகள் வருமாறு:

★ மக்கள் என்பதற்கும் சிறுபான்மையினர் என்பதற்கும் வேறுபாடு உண்டு. மக்கள் எனப்படுவோர் சட்டப்படி சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். ஆனால் சிறுபான்மையினர் தாம் வாழும் நாட்டு அரசுக்குக் கீழ் உரிமைகளை மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும்.

★ மக்கள் எனப்படுவோர் தாம் விரும்பினால் தாய் அரசிலிருந்து பிரிந்து போடும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

**தனி அரசு இல்லை**

★ இலங்கையில் தற்போதைய பிணக்குத் தோன்றுவதற்கு முன்னர் வடக்கு-கிழக்குக்குத் தனியான அரசு இருக்கவில்லை. குடியேற்ற ஆதிக்க நிர்வாகத்தின் போதும் இலங்கை ஒரே நிர்வாக அமைப்பாகவே இருந்தது. சுதந்திரம் பெற்றபோது ஒரே நிர்வாகத்தின் கீழ் இருந்த நாடுகளில் பிரிவினை ஏற்படுவதை ஐ. நா. சபை விரும்புவதில்லை.

**சர்வதேச மன்றை அமைக்கலாம்**

★ எனினும் இலங்கையைப் பொறுத்த வரையில் ஒரு சர்வதேச விசாரணை மன்று ஏற்படுத்தப்படுவது பொருத்தமானது.

★ அங்கு சுயநிர்ணய உரிமை கோரும் மக்களின் பிரதிநிதிகள் தமது தரப்பு வாதங்களை முன் வைக்கலாம்.

★ மொழி, கலாசாரம், இனம், சமயம், தனியான நிறுவனங்கள் இருந்தமை, மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான வேறு சாட்சியங்களை விசாரணை மன்று பரிசீலனை செய்யலாம்.

★ அந்த வாதங்களை வைத்துக் கொண்டு தமிழர்களது பிரதேசம் தனியாக இருந்ததா, தனி அரசால் ஆளப்பட்டதா என்பதை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர முடியும். [அ-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org